# 100 நாள் வேலைத் திட்டம் : நிதி வழங்காத ஒன்றிய அராஜக அரசைக் கண்டித்து தமிழ்நாடெங்கும் ஆர்ப்பாட்டம்!



வேலூர் மாவட்டம், அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி, வேலூர் ஒன்றியம், கீழ்மொனவூர் ஊராட்சி, கீழ்மொனவூர் பெருமாள் நகரில் 100 நாள் வேலை உறுதி திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய ரூ.4034 கோடி நிதியை வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ச்சியாக வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர், ஏ.பி. நந்தகுமார் எம்.எல்.ஏ கலந்து கொண்டு ஒன்றிய அரசைக் கண்டித்து கண்டன பேருரை ஆற்றினார். ஆர்ப்பாட்டத்தில் சி.எல்.ஞானசேகரன் தா.பாபு, கீ.கோ.ராமலிங்கம் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.




தமிழ்நாட்டில்100 நாள் வேலை திட்டம் ஊதியம் வழங்கிடாத ஒன்றிய அரசைக் கண்டித்து கடலூர் மேற்கு மாவட்டம் மங்களூர் கிழக்கு ஒன்றியக் கழகம் சார்பில் தொழுதூர் இராமநத்தத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மங்களூர் கிழக்கு ஒன்றியக் கழக செயலாளர் பட்டூர் வீர.அமிர்தலிங்கம் தலைமையில் திட்டக்குடி நகர கழக செயலாளர் வி.பி.பி.பரமகுரு முன்னிலையில் நடைபெற்றது. இதில் ஒன்றிய, நகரக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் சாக்கோட்டை கிழக்கு ஒன்றிய கழகத்தின் சார்பில்கழகதலைவர் முதல்வர் தளபதி அவர்கள் உத்தரவின் பேரில் புதுவயலில் ஒன்றிய கழகச் செயலாளர் சின்னதுரை தலைமையில் பேரூர்கழக செயலாளர் பக்ருதீன் அலி முன்னிலையில் ஒன்றிய அரசு தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி அளித்த திட்டத்திற்கு நிதி வழங்காததை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் ஒன்றியகழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



கடலூர் கிழக்கு மாவட்டம், குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றியம், குள்ளஞ்சாவடியில் , ஒன்றிய கழக செயலாளர் வி. சிவகுமார் தலைமையில், ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர் கே பி ஆர் பாலமுருகன், வடலூர் நகர செயலாளர் தமிழ்ச்செல்வன், வடலூர் நகராட்சி தலைவர் சிவக்குமார், ஒன்றிய அவைத் தலைவர் ராமமூர்த்தி, மாவட்ட தொழிலாளர் அணி கி .தண்டபாணி மற்றும் அன்பழகன், ஆறுமுகம், ராஜா, வெற்றிவேல் ,ராஜா , சிவக்குமார் , ராஜ பாண்டியன், கௌதம், கோபால கிருஷ்ணன், சதீஷ்குமார், செல்வம் , வளர்மதி செந்தில்,ராமர், முத்துலிங்கம் , அந்தோணிசாமி ,ராபர்ட், சங்கர் , ஆயிகுப்பம் செங்குட்டுவன், முருகன், ரங்கராஜ், மகளிர் அணி சாந்தி, பாரதி, ராணி மற்றும் கழகத் தோழர்கள், கழக முன்னோடிகள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு கண்டன முழக்கமிட்டனர்.



100 நாள் வேலை உறுதித் திட்ட நிதி 4000 கோடியை தமிழ்நாட்டிற்குத் தராமல் ஏழை எளியோர் வயிற்றில் அடிக்கும் மோடி தலைமையிலான ஒன்றிய அரசைக் கண்டித்து தஞ்சை வடக்கு மாவட்டம் அண்ணலக்ரஹாரத்தில் மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட பொருளாளர் நடராஜன், பொதுக்குழு உறுப்பினர் இரா.அசோக்குமார், 3வது பகுதி செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் க. செந்தில்குமார், எஸ். முருகன், கே.கே.எஸ். ராஜா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் மறவமங்கலத்தில் தமிழக முதல்வர், கழக தலைவர் தளபதி அவர்கள் உத்தரவின் பேரில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி அளிப்பு திட்டத்திற்கு நிதி வழங்காத ஒன்றிய அரசினை கண்டித்து ஒன்றிய செயலாளர் யோக.கிருஸ்ணகுமார் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.இதில் தெற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



சிவகங்கை தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் வாணியங்குடியில் கழகத் தலைவர், முதல்வர் அவர்கள் தளபதி உத்தரவின் பேரில் ஒன்றிய அரசு தேசிய ஊரக உறுதி வேலைவாய்ப்பு திட்டத்திற்கு நிதி வழங்காத ஒன்றிய அரசைக் கண்டித்து தெற்கு ஒன்றிய கழக செயலாளர்எம். ஜெயராமன் தலைமையில் சிவகங்கை நகர்கழக செயலாளர் சி.எம்.துரை.ஆனந்த் முன்னிலையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாநில கொள்கை பரப்பு இணைச் செயலாளர் தமிழ் பிரியா, மாவட்ட மகளிர் அணி நிர்வாகிகள் மார்க்ரெட் கமலா, திலகவதி கண்ணன், மாவட்ட ஆதிதிராவிடர் நலக் குழு அமைப்பாளர் சிங்கமுத்து மற்றும் தெற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை மேற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில்ராஜகம்பீரத்தில் ஒன்றிய கழக செயலாளர் எம் .அண்ணாதுரை தலைமையில் கழகத் தலைவர், முதல்வர் தளபதி அவர்கள் உத்தரவின் பேரில் ஒன்றிய அரசு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை அளிப்பு உறுதி திட்டத்தில் நிதி வழங்காததை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.




நூறு நாள் வேலைத் திட்டத்திற்கு நிதி வழங்காத ஒன்றிய அரசைக் கண்டித்து தண்டராம்பட்டு மேற்கு ஒன்றியம் தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் பங்கேற்றனர்.